வணிகக்கல்வி

காப்புறுதி ஒப்பந்த வகைகள்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 8.3 : வணிகங்களைப் பல்வேறுபட்ட இடர்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளைப் பரிசீலனை செய்வார்.

காப்புறுதி ஒப்பந்த வகைகள்









காப்புறுதியின் பிரதான வகைகள்

01 ஆயுட்காப்புறுதி / நீண்டகால காப்புறுதி

02 பொதுக் காப்புறுதி / சொத்துக் காப்புறுதி



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஆயுட் காப்புறுதி

நபரொருவர் எதிர்பாராத வகையில் அல்லது வயது முதிர்வின் காரணமாக ஏற்படும் இறப்பு மற்றும் அங்கவீனம் காரணமாக இடர்களிற்கு முகங்கொடுக்கும் போது காப்புறுதி செய்தவருக்கு அல்லது அவரில் தங்கி வாழ்பவருக்கு நிதி ரீதியான நன்மையினைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தமாகும்.



ஆயுட்காப்புறுதியில் நிலையான காலமொன்றைக் குறிப்பிட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் போது காப்புறுதி செய்வோன் அக்காலப்பகுதியில் இறப்பாராயின் அவரில் தங்கி வாழ்வோர் அல்லது பெயர் குறிப்பிட்ட நபருக்கு இழப்பு உரித்தாகும்.

காப்புறுதி செய்வோன் ஒப்பந்தக் காலம் முடிவடையும் வரை உயிருடன் இருப்பாரயின் ஒப்பந்த தொகையுடன் மேலதிக அனுகூலங்களும் சேர்த்து ஒப்பந்தம் செய்தவருக்கு வழங்கப்படும்.

பொதுக் காப்புறுதி

குறித்த சொத்தொன்றிற்கு எதிர்பாராத விதமாக ஏற்படும் இழப்புகளிலிருந்து இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக் கொள்வதற்காக சொத்தின் உரிமையாளரினால் காப்புறுதி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தமாகும்.



பொதுக் காப்புறுதியினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்



- தீ அபாயக் காப்புறுதி
- களவபாயக் காப்புறுதி
- இயற்கை அனர்த்தக் காப்புறுதி
- கடலபாயக் காப்புறுதி
- மோட்டார் வாகனக் காப்புறுதி
- பொறுப்புக் காப்புறுதி
- வழிச்சரக்குக் காப்புறுதி
- வழிப்பணக் காப்புறுதி

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தீ அபாயக் காப்புறுதி



கட்டடம் அல்லது ஏனைய சொத்துக்களுக்கு தீயினால் ஏற்படக்கூடிய சேதத்தினை ஈடுசெய்வதற்காக பெற்றக்கொள்ளப்படும் ஒப்பந்தமே தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் தீ அபாயக் காப்புறுதியினூடாக மேலதிக தவணைக் கட்டணத்தைச் செலுத்தி ஒப்பந்தத்தை விரிவுபடுத்தி பின்வரும் இடர்களையும் உள்வாங்குவதனூடாக இவற்றுக்கெதிரான இழப்பீடுகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

1. வேலை நிறுத்தங்களிலான நட்டம்/ சண்டை
2. வெடிபொருட்களால் ஏற்படும் சேதம்
3. மின்சார ஒழுக்கின் காரணமாக ஏற்படும் சேதம்
4. வெள்ளப்பெருக்கு/ சூறாவளி/வரட்சி
5. பூமியதிர்ச்சி/ ஆழிப் பேரலை
6. ஆகாய விமான விபத்து
7. போராட்டங்களினால் ஏற்படும் சேதம்
8. மேற்குறிப்பிட்டவையுடன் இணைந்ததாக ஏற்படக்கூடிய நட்டச் சேதம்

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

களவபாயக் காப்புறுதி



வணிக நிறுவனங்களில் அல்லது வீடுகளில் கள்வரால் இடம்பெறக்கூடிய அபாய இடரை நிவர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தி கொள்ளப்படும் ஒப்பந்த வகை இதுவாகும்.

இயற்கை அனர்த்தக் காப்புறுதி

வெள்ளம்/ வரட்சி போன்றவைகளால் சொத்துக்களிற்கு ஏற்படக்கூடிய சேதத்திற்கு இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்த வகை இதுவாகும்.

கடலபாயக் காப்புறுதி

கடல்வழி போக்குவரத்தின் போது கப்பலுக்கும் கப்பலில் கொண்டு செல்லப்படும் சரக்குகளுக்கும் ஏற்படும் இடர்களிற்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தப்படும் காப்புறுதி ஒப்பந்த வகை இதுவாகும்.

இது இரு அடிப்படையில் வகைப்படுத்தமுடியும்

- கப்பல் காப்புறுதி (Hull Insurance)
- கப்பல் சரக்கு காப்புறுதி (Cargo Insurance)

கப்பல் காப்பறுதி என்பது கடல் பிரயாணங்களின் போது கப்பலிற்கு இடர்களிற்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்த வகை இதுவாகும்.

கப்பல் அபாயக் காப்புறுதியினை கப்பல் உரிமையாளர்கள் அல்லது கப்பல் கம்பனிகள் மட்டுமே மேற்கொள்ளமுடியும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

கப்பல் காப்புறுதியின் பல்வேறு காப்புறுதி ஒப்பந்தங்கள்



கப்பல் சரக்கு காப்புறுதி என்பது கப்பலில் ஏற்றப்பட்டுள்ள சரக்குகளுக்கு ஏற்படும் இடர்களிற்கான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்த வகை இதுவாகும்.
இதனை பின்வரும் கட்சியினர் ஏற்படுத்திக்கொள்ள முடியும்



இக்கப்பல் சரக்கு காப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பின்வரும் ஒப்பந்த வகைகளை பெற்றுக்கொள்ள முடியும்

01 மதிப்பிடப்பட்ட ஒப்பந்தம்

02 திறந்த ஒப்பந்தம்

03 எதிர்காலப் பாதுகாப்பு ஒப்பந்தம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மோட்டார் வாகனக் காப்புறுதி

மோட்டார் வாகன விபத்துக்கள் மூலம் மோட்டார் வாகனங்கள், வாகனங்களில் பயணம் செய்யும் நபர்கள், மூன்றாம் தரப்பினர்களுக்கும் இடம்பெறக்கூடிய சேதத்திற்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்ளவதற்காக மோட்டார் வாகன உரிமையாளர்களும் காப்புறுதிக் கம்பனிகளும் ஏற்படுத்திகொள்ளப்படும் ஒப்பந்தமாகும்.

மோட்டார் வாகன காப்புறுதியின் கீழ் பின்வரும் காப்புறுதி வகைகளை பெற்றுக்கொள்ளலாம்

01

பூரண பொறுப்புடன் கூடிய காப்புறுதி ஒப்பந்தம்/ விரிவான காப்புறுதி ஒப்பந்தம்

இவ் ஒப்பந்தத்தின் மூலம் குறித்த வாகனத்திற்கும் பயணிக்கும் நபர்களுக்கும் வாகனத்திலுள்ள சொத்துகளிற்கும் ஏற்படும் சேதம் உள்ளடக்கப்பட்டு இழப்பீடு வழங்கப்படும்.

02

2ம் பிரிவு தீ மற்றும் களவபாயக் காப்புறுதி

இவ் ஒப்பந்தத்தின் மூலம் குறித்த வாகனத்திற்கு தீயினாலும் களவுகள் மூலம் இடம்பெறும் சேதங்களுக்கும் மூன்றாம் தரப்பினருக்கும் அவர்கள் சொத்துகளுக்கும் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தமாகும்.

03

3ம் பிரிவுக் காப்புறுதி

மூன்றாம் தரப்பினர்களுக்கும் அவர்களின் சொத்துக்களிற்கும் ஏற்படும் சேதங்களிற்கு மட்டும் ஏற்படும் இழப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk







பொறுப்புக் காப்புறுதி (The Liability Insurance)

வணிகர்களிற்கும் அவர்களின் செயற்பாடுகள் காரணமாக அவர்களுடன் தொடர்புடைய ஏனைய பிரிவினருக்கும் இடம்பெறும் சேதம் தொடர்பான பொறுப்பிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

இப்பொறுப்புக் காப்புறுதி என்பதனுள் பின்வரும் காப்புறுதி ஒப்பந்த வகைகள் காணப்படுகின்றன.

* பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி
* உற்பத்தி பொறுப்புக் காப்புறுதி
* ஊழியர் பொறுப்புக் காப்புறுதி

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பொதுமக்கள் பொறுப்புக் காப்புறுதி

ஆதனம் அல்லது வணிக நடவடிக்கைகளின் எதிர்பாராத நிகழ்வொன்றினால் 3ம் பிரிவினர் அதாவது பொதுமக்களுக்கு ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக அச்சொத்து உரிமையாளர் அல்லது வணிகர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

உற்பத்தி பொறுப்புக் காப்புறுதி

வணிகமொன்று விற்பனை செய்யும் உற்பத்திகளை நுகர்வோரினால் நுகரப்படும்போது ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக வணிகர்களால் அல்லது உற்பத்தியாளர்களால் ஏற்படுத்தி கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் இதுவாகும்.

ஊழியர் பொறுப்புக் காப்புறுதி

ஊழியர்கள் சேவையில் ஈடுபடும் போது அச்சேவையின் காரணமாக ஏற்படும் விபத்துக்களினால் ஏற்படும் காயங்கள் சுகயீனங்கள் உயிரிழப்புக்கள் என்பவற்றினால் உருவாகும் சேதங்களிலிருந்து இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பதற்காக சேவை வழங்குனர்களால் அதாவது தொழில் வழங்குனர்களால் ஏற்படுத்தி கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தமாகும்

வழிச்சரக்குக் காப்புறுதி

வணிகத்தின் பொருட்கள் தரை மார்க்கமாக இடம் நகர்த்தப்படும் போது போக்குவரத்து ஊடகத்தில் பொருட்கள் ஏற்றப்பட்டதிலிருந்து அப்பொருட்களை தரையிறக்கும் வரையிலும் ஏற்படக்கூடிய சேதங்களிலிருந்து இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தி கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

வழிப்பணக் காப்பறுதி

பணத்தினை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு கொண்டுசெல்லும் போது ஏற்படக்கூடிய இழப்புகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக ஏற்படுத்தி கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தமாகும்.

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

செயற்பாடு 01

1. உமது பிரதேசத்தில் காணப்படும் காப்புறுதி நிறுவனம் ஒன்றினை தெரிவு செய்து அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் காப்புறுதி வகைகளை பட்டியற்படுத்துவதுடன் அவ் ஒப்பந்தங்கள் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய காப்புறுதி தத்துவங்களையும் பட்டியற்படுத்துக.

2. குறித்த காப்புறுதி நிறுவன முகவர் ஒருவருடன் தொடர்புகொண்டு பின்வரும் தத்துவங்கள் மீறப்பட்டதால் இழப்பீடு மறுக்கப்பட்ட சம்பவங்கள் தலா 2 வீதம் குறிப்பிடுக.

1. உரிமைத் தத்துவம்
2. உச்ச நம்பிக்கைத் தத்துவம்
3. அண்மைக் காரணித் தத்துவம்
4. பங்களிப்புத் தத்துவம்
5. பதிலாள் வைப்புத் தத்துவம்
6. இழப்பீட்டுத் தத்துவம்



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள்

1. சுசீலா என்பவர் தனது சுவீகாரக் குழந்தையான வசந்தனுக்கு ஆயுளுறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். குழந்தைப் பருவத்திலிருந்தே காணப்பட்ட ஒரு நோயின் காரணமாக வசந்தன் 25 வயதில் இறந்தான். வசந்தனின் ஆயுளுறுதிப் பத்திரம் தொடர்பில் நட்டஈட்டை பெற்றுக்கொள்வதில் சுசீலா எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக?

2. காப்புறுதி செய்த ஒருவர் வெளிக்கட்சியிடமிருந்து நட்டஈட்டை பெறுவதற்காக காப்புறுத்துவோருக்கு மாற்றும் தத்துவம் எது?

3. பாரியளவிலான பெறுமானங்கொண்ட சொத்துகளிற்கு காப்புறுதி செய்யும் பிரதான இருமுறைகள் யாது?

4. வணிகர் ஒருவர் எதிர்நோக்கும் இடர்கள் சில கீழே தரப்படுகிறது.
   1. உணவுகள் நஞ்சாவதால் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்பு
   2. மின்னொழுக்கினால் ஏற்படும் பாதிப்பு
   3. மோட்டார் வாகனத்தினால் ஏற்படும் பாதிப்பு
   4. பெருந்தெருக்களில் பொருட்களை எடுத்துச்செல்லும்போது பாதையில் ஏற்படும் பாதிப்புக்கள்

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நடவடிக்கைகளிலிருந்தும் பாதுகாப்பை பெறுவதற்காக ஏற்படுத்தக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளை குறிப்பிடுக?

5. விமல் என்பவர் தான் வசிக்கும் வீட்டிற்காக ரூபா 200000 இற்கு X கம்பனியிடமிருந்து காப்புறுதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொண்டதுடன் ரூபா 600000 இற்கு Y கம்பனியிடமிருந்து மற்றுமொரு காப்புறுதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட அதேவேளை ரூபா 800000 இற்கு தனது ஆயுளை Y கம்பனியிடம் காப்புறுதி ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளார். வீடு தீயினால் சேதமடைந்த காரணத்தினால் ஏற்பட்ட இழப்பு ரூபா 400000 ஆக கணிப்பிடப்பட்டது. இதனை அறிந்த விமல் மாரடைப்பால் இறந்துவிட்டார். X, Y கம்பனிகள் விமலின் பின்னுரித்தாளிக்கு வழங்கும் இப்பீட்டு தொகைகளின்

6. பின்வரும் தலைப்புக்களில் ஆயுட்காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிக்குமான வேறுபாட்டை அட்டவணைப்படுத்துக?

தலைப்புக்கள்	ஆயுட்காப்புறுதி	ஏனைய காப்புறுதி
1. இழப்பு		
2. ஒப்பந்த காலம்		
3. மிகைக் கொடுப்பனவு		
4. ஒப்பந்த தொகை		
6. உரிமை மாற்றம்		

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள் - பகுதி 1

மிகப் பொருத்தமான விடையினை தெரிவுசெய்க.

1. காப்புறுதித் தத்துவங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

A. இழப்பீடு
B. பங்களிப்பு
C. பதிலாள் வைப்புத் தத்துவம்
D. மிக்குயர் நம்பிக்கை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஆயட்காப்புறுதிக்கு பொருந்தக்கூடிய தத்துவத்தை தெரிவுசெய்க?

1) A 2) B 3) C 4) D 5) இவற்றுள் எதுவுமில்லை

2. குறித்வொரு ஆதனத்திற்கு இரட்டை காப்புறுதியை செய்துள்ளபோதும் இவ் ஆதனத்தின் பெறுமதிக்கு மேலாக நட்டஈட்டைப் பெறுவதை தடுக்கின்ற காப்புறுதித் தத்துவம்?

1) பதிலாள் வைப்புத் தத்துவம்
2) மிக்குயர் நம்பிக்கைத் தத்துவம்
3) பங்களிப்புத் தத்துவம்
4) காப்புறுதி செய்தகு நலன்
5) அண்மைக்காரணித் தத்துவம்

3. அக்ஷிகன் என்பவர் தனது காரை ரூபா 3 மில்லியனுக்கு காப்புறுதி செய்துள்ளார். அவரது கார் அடையாளம் தெரியாத ஒருவரால் திருடப்பட்டது. காப்புறுதி நிறுவனம் ரூபா 3 மில்லியனை அக்ஷிகனுக்கு நட்டஈடாக செலுத்தியது. சில நாட்களின் பின்னர் காப்புறுதி நிறுவனத்தால் கார் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அது ரூபா 3.5 மில்லியன் சந்தைப் பெறுமதிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது (ஏல விற்பனைக் கட்டணம் 150000) அதன்பின்னர் காப்புறுதி நிறுவனம் செய்யவேண்டியது?

1) ரூபா 3 மில்லியனை வைத்துக்கொண்டு மிகுதியை அக்ஷிகனுக்கு வழங்குதல்
2) ரூபா 3 மில்லியனையும் பிற செலவுகளையும் வைத்துக்கொண்டு மிகுதியை அக்ஷிகனுக்கு வழங்குதல்
3) ஏல விற்பனைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் மிகுதியை காப்புறுதி நிறுவனம் வைத்துக்கொள்ளதல்
4) மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்தவருக்கு மிகுதி தொகையை வழங்குதல்
5) மிகுதி தொகையை அரசுக்கு செலுத்துதல்

4. காப்புறுதி செய்பவர் வெளிக்கட்சியினரிடமிருந்து இழப்பீட்டை பெறும் தனது உரிமையை காப்புறுத்துவோனுக்கு மாற்ற வேண்டும் எனக்குறிப்பிடும் தத்துவம்?

1) காப்புறுத்தும் உரிமை
2) உயர்நம்பிக்கைத் தத்துவம்
3) அங்கத்ததுவ தத்துவம்
4) இழப்பீட்டுத் தத்துவம்
5) பதிலாள் வைப்புத் தத்துவம்

5) பின்வருவனவற்றில் காப்புறுதி செய்யமுடியாத இடர் எது?

1) இறப்பு
2) பாடகரின் குரல்
3) நடனக் கலைஞரின் கால்கள்
4) மோட்டார் வாகனத்தேய்வு
5) வணிகம் களவாடப்படுதல்

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள்
பகுதி 2

1) காப்புறுதி செய்வதற்கு அபாயம் என ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பூர்த்தி செய்யப்படவேண்டிய பிரமாணங்கள் எவை?

2) காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கான அடிப்டை தேவைப்பாடுகள் யாவை?

3) பின்வரும் பதங்கள் தொடர்பில் சிறுகுறிப்பு எழுதுக?
   * இடரும் காரணமும்
   * நட்டங்களும் சேதங்களும்

4) தீ அபாயக் காப்புறுதி உடன்படிக்கை ஒன்றின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய தீ தவிர்ந்த ஏனைய இடர்கள் எவை?

5) காப்புறுதி செய்தவர்களைப் பாதுகாப்பதற்கான நிதியம் ஒன்றை நிகழ்த்துவதற்காக காப்புறுதி கம்பனிகளின் ஆண்டுக்குரிய வருமானத்திலிருந்து அறவிடப்படும் வரியின் பெயர் யாது?



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள்

பின்வரும் விடயத் தகவல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன

1) மாதுரி அவரின் மூத்த சகோதரர் ஒருவர் மாத்திரம் சகோதரராக காணப்பட்ட போதும் அவரின் ஆயுளை மாதுரிக்கு காப்புறுதி செய்யமுடியவில்லை.

2) மதி என்பவர் தனக்கு இருந்த இருதய நோயினை மறைத்து காப்புறுதி மேற்கொள்ளப்பட்டமையால் அவர் உயிரிழந்தபோது இழப்பீட்டினை பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

3) நிரோவின் மோட்டார் வாகனம் 20 இலட்சம் ரூபாவிற்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தாலும் 4 இலட்சம் ரூபா சேதமொன்று ஏற்படும் போது இழப்பீடாக 4 இலட்சம் ரூபா மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டமை.

4) கிருசா என்பவர் தனது வணிக நிறுவனத்தினை தலா 15 இலட்சம் வீதம் மூன்று காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்துள்ளார். சேதம் ஒன்றில் 6 இலட்சம் ரூபா இழப்பீடு ஏற்படும் போது மூன்று காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் மொத்த இழப்பீட்டுத் தொகை 6 இலட்சம் ரூபாவை மூன்று காப்புறுதி நிறுவனங்களும் இணைந்து பகிர்ந்து வழங்கும்.

5) அனுவின் 3 இலட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிள் முழுப் பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் போது அது முழுமையாக சேதமடைந்து புதிய மோட்டார் சைக்கிள் காப்புறுதி கம்பனியினால் வழங்கப்பட்டபின் அவ்வாகனத்தின் எஞ்சிய சில பொருட்களை அனு கேட்டபோது காப்புறுதி நிறுவனம் கொடுக்க மறுத்தது.

6)தீ மற்றும் வெடிபொருட்களால் ஏற்படும் சேதங்களுக்கெதிராக காப்புறுதி ஒப்பந்தம் செய்த வரதன் என்பவரின் வணிகம் தீவிரவாதிகளின் கலகத்தால் சேதமடைந்த போது இழப்பீடு மறுக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் இழப்பீடு வழங்க மறுக்கப்பட்டமையுடன் தொடர்புடைய காப்புறுதி தத்துவங்களை பெயரிடுக?



தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி வினாக்கள்

மூன்று நபர்கள் தொடர்பான வீபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது



சுமதி
எழுதுவினைஞர் பதவியில் உள்ளவர். அவருக்கு 12 வயதிலும் குறைந்த மூன்று பிள்ளைகள் உள்ளனர். கணவர் இறந்துள்ளார். கணவரின் உரிமையில் வீடும் வாகனமும் உள்ளன.



நீதன்
தளபாட உற்பத்தி நிலையமொன்றையும் சில விற்பனையகங்களையும் நடத்திச் செல்பவர். இவரது தொழிற்சாலை களனி கங்கைக்கு அருகாமையில் உள்ளது. தனது உற்பத்திகளை தனக்குச் சொந்தமான மோட்டார் வண்டியில் நாடு முழுவதுமுள்ள வியாபாரிகளுக்கு விநியோகிக்கின்றார்.



வதனன்
பல தேயிலை இறப்பர் தோட்டங்களுக்கு உரிமையாளராவார். இரு தேயிலைத் தொழிற்சாலைகள் அவருக்கு சொந்தமானது. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக தோட்டங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் செல்வது அவரது வழக்கமாகும். அவரது உற்பத்திகளை அவரே ஏற்றுமதி செய்கின்றார்

மேற்குறிப்பிட்ட தகவல்களின் அடிப்படையில் சுமதி, நீதன், வதனன் ஆகியோரினால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்களைக் குறிப்பிடுக?

தொகுப்பு :- திருமதி.நிமால் சிவாஜினி, வணிகக்கல்வி ஆசிரியர், வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்

கணினி வடிவமைப்பு :- திரு.இ.மத்தியூஸ் டியோனி, த.தொ.தொ ஆசிரியர், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk